## History Model Test Questions 8 in Tamil With Answers

1. இரண்டாம் சந்திர குப்தரின் அவையைப் பார்வையிட்ட சீனநாட்டுப் பயணியின் பெயர் என்ன?

**அ. பாஹியான்** ஆ. இட்சிங்

இ. பிலினி ஈ. தாலமி

2. தமிழ் கல்வெட்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள பழமையான மொழி எது?

அ. சமஸ்கிருதம் **ஆ. தமிழ் பிராமி**

இ. தமிழ் எழுத்துக்கள் ஈ. தெலுங்கு எழுத்துக்கள்

3. தரங்கம்பாடியில் டானிஷ் கோட்டையான போன்ஸ் பெர்க்-ஐக் கட்டியவர் யார்?

**அ. ஒவ்கிட்டி** ஆ. இராபர்ட் கிளைவ்

இ. வில்லியம் பெண்டிங் ஈ. வெல்லெஸ்லி பிரபு

4. 'தென்னாட்டுத் திலகர்' என்று அழைக்கப்படுபவர் யார்?

அ. படேல் **ஆ. வ.உ.சிதம்பரம்**

இ. பாரதிடயார் ஈ. பாரதிதாசன்

5. இந்திய விடுதலைக்குப் பிறகு இந்தியாவை ஒருங்கிணைத்த பொறுப்பு பின்வரும் ஒருவரை சாரும்

அ. மகாத்மா காந்தி ஆ. ஜவஹர்லால் நேரு

இ. மௌலானா ஆஸாத் **ஈ. வல்லபாய் பட்டேல்**

6. ஜவஹர்லால் நேருவுக்கு பிறகு இந்திய பிரதம அமைச்சராக பொறுப்பேற்றவர்

அ. இந்திராகாந்தி ஆ. மொரார்ஜி தேசாய்

**இ. லால்பகதூர் சாஸ்திரி** ஈ. ஜகஜீவன் ராம்

7. பிரம்ம சமாஜம் என்ற அமைப்பை உருவாக்கியவர்

**அ. இராஜாராம் மோகன்ராய்** ஆ. சுவாமி விவேகானந்தர்

இ. இரபீந்திரநாத் தாகூர் ஈ. பாலகங்காதர திலகர்

8. 'இந்தியாவில் பிஸ்மார்க்' என அழைக்கப்படுபவர்

அ. இராஜகோபாலச்சாரி ஆ. காமராஜ்

**இ. வல்லபாய் பட்டேல்** ஈ. ஜவஹர்லால் நேரு

9. மகாத்மா காந்தியை தேசபிதா எனக் குறிப்பிட்டவர்

அ. ஜவஹர்லால் நேரு ஆ. இரபீந்திரநாத் தாகூர்

இ. பாலகங்காதர திலகர் **ஈ. சுபாஷ் சந்திர போஸ்**

10. மகாகவி சுப்ரமணிய பாரதியார் பிறந்த இடம்

அ. திருநெல்வேலி **ஆ. எட்டயபுரம்**

இ. சிவகங்கை ஈ. அருப்புக்கோட்டை

11. காந்திஜியின் அரசியல் குரு

**அ. கோபாலகிருஷ்ண கோகலே** ஆ. பாலகங்காதர திலகர்

இ. மோதிலால் நேரு ஈ. தாதாபாய் நௌரோஜி

12. ‘சதி’என்ற பழக்கம் பின்வரும் சீர்திருத்தவாதியால் ஒழிக்கப்பட்டது

அ. அரவிந்த் கோஷ் ஆ. இரபீந்திரநாத் தாகூர்

இ.தயானந்த சரஸ்வதி **ஈ. இராஜாராம் மோகன்ராய்**

13. ‘ஜன கண மன’ என்ற தேசிய கீதத்தை இயற்றியவர்

**அ. இரபீந்திரநாத் தாகூர்** ஆ. பங்கிம் சந்திர சட்டர்ஜி

இ. சரோஜினி நாயுடு ஈ. இவர்களில் எவருமிலர்

14. ‘வந்தே மாதரம்’ என்ற தேசிய பாடலின் ஆசிரியர்

அ. இரபீந்திரநாத் தாகூர் ஆ. தாதாபாய் நௌரோஜி

**இ. பங்கிம் சந்திர சட்டர்ஜி** ஈ. இவர்களில் எவருமிலர்

15. எதனை விசாரிப்பதற்காக ஆங்கில அரசு ஹண்டர் கமிஷனை நியமித்தது?

அ. பர்தோலி சத்யாகிரஹா ஆ. கிலாபத் போராட்டம்

**இ. ஜாலியன் வாலாபாக் படுகொலை** ஈ. சௌரி சௌரா நிகழ்ச்சி

16. எந்த வருடத்தில் முஸ்லீம் லீக் சுய அரசாங்கத்தை தனது குறிக்கோள்களுள் ஒன்றாக ஏற்றுக் கொண்டது

அ. 1919 ஆ. 1911 **இ. 1912** ஈ. 1920

17. யார் வைஸ்ராயாக இருக்கும் பொழுது அரசர் ஐந்தாம் ஜார்ஜ் இந்தியாவிற்கு வருகை தந்தார்?

அ. ரிப்பன் பிரபு ஆ. கர்ஸன் பிரபு

**இ. ஹார்டிங் பிரபு** ஈ. ஹேஸ்டிங் பிரபு

18. கீழே கொடுக்கப்பட்டுள்ள சட்டங்களில் எந்த சட்டம் சட்டசபையில் முதன் முதலில் இந்தியர்களுக்கு பிரதிநிதித்துவம் அளித்தது?

**அ. இந்திய கவுன்சில் சட்டம், 1909** ஆ. இந்திய கவுன்சில் சட்டம், 1919

இ. இந்திய கவுன்சில் சட்டம், 1935 ஈ. இவற்றுள் எதுவுமில்லை

19. முஸ்லீம்கள் முதன் முதலில் கல்வியிலும் மற்ற வர்த்தகத்திலும் பங்கேற்ற ஒரே ஒரு மகாணத்தை குறிப்பிடுக.

அ. வங்காளம் ஆ. பஞ்சாப்

இ. மதராஸ் **ஈ. பம்பாய்**

20. 1907 ஆம் ஆண்டு லண்டனில் நடந்த பொதுக்கூட்டத்தில் யார் சர் கர்ஸன் வில்லியை துணிகரமாக கொலை செய்தது?
அ. பி.என்.தத்தா **ஆ. எம்.எல்.டிங்ரா**
இ. சர்தார் அஜித்சிங் ஈ. எஸ்.சி.சாட்டர்ஜி

21. ஜாலியன்வாலாபாக் படுகொலைக்கு காரணமானவை
அ. ஜின்னா ஆ. ரௌலட்
இ. மாண்டெகு **ஈ. ஜெனரல் டயர்**

22. இந்திய தேசியப் படையை நிறுவியவர்
அ. காந்திஜி ஆ. நேரு இ. பட்டேல் **ஈ. நேதாஜி**

23. இந்தியாவில் ஆங்கிலேயருக்கு எதிராக ஏற்பட்ட முதல் இராணுவ எதிர்ப்பு
அ. இந்திய சிப்பாய்கள் கலகம் கி.பி. 1857
**ஆ. வேலூர் சிப்பாய்கள் கலகம் கி.பி. 1806**
இ. இராஜாக்களின் எதிர்ப்பு
ஈ. அவுத் பீகம்களின் எதிர்ப்பு

24. ரௌலட் சட்டம் எந்த ஆண்டில் நிறைவேற்றப்பட்டது?
அ. 1931 **ஆ. 1919** இ. 1920 ஈ. 1942

25. மகாதேவ் கோவிந்த் ரானடே உறுப்பினராக இருந்த சபை
அ. ஆரிய சமாஜம் **ஆ. பிரார்த்தனா சமாஜம்**
இ. இந்திய லீக் ஈ. பிரம்ம ஞான சபை

26. 1916 ஆம் ஆண்டில் முஸ்லீம் லீக்கையும் காங்கிரசையும் ஒன்று சேர்த்ததில் யார் முக்கிய பங்கினை ஆற்றினார்?
**அ. பி.ஜி.திலக்** ஆ. மௌலானா ஆசாத்
இ. லாலா லஜபதி ராய் ஈ. மதன் மோகன் மாளவியா

27. சுபாஷ் சந்திரபோஸ் காங்கிரஸ் கட்சியின் தலைமை பதவியிலிருந்து விலகிய வருடம்
அ. 1932 **ஆ. 1939** இ. 1940 ஈ. இவற்றுள் எதுவுமில்லை

28. கதர் கட்சியின் (Gadar Party) தலைமையகம் இருந்த இடம்
அ. மாஸ்கோ ஆ.பெர்லின்
**இ. சான் பிரான்சிஸ்கோ** ஈ. கராச்சி

29. இந்தியா விடுதலை பெற்ற சமயத்தில் காங்கிரஸ் கட்சியின் தலைவர் யார்?
அ. மகாத்மா காந்தி ஆ. ஜவஹர்லால் நேரு
**இ. ஜே.பி. கிருபளானி** ஈ. சர்தார் பட்டேல்

30. பங்கிம் சந்திர சட்டோபாத்யாயா எந்த வருடத்தில் 'ஆனந்த மத்' தை எழுதினார்?

அ. 1858 ஆ. 1892 **இ. 1882** ஈ. இவற்றுள் எதுவுமில்லை

31. மகாபலிபுரத்திலுள்ள பாறைகளிலுள்ள சிற்பக்கலை பின்வரும் ஒரு குறிப்பிட்ட மன்னவர்கள் காலத்தில் செய்யப்பட்டது?

அ. சோழர்கள் **ஆ. பல்லவர்கள்**

இ. பாண்டியர்கள் ஈ. சாளுக்கியர்கள்

32. இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது மிக சக்தி வாய்ந்த கோஷமாக அமைந்தது 'செய் அல்லது செத்துமடி' அதை வழங்கியவர் யார்?

**அ. காந்தி** ஆ. நேரு இ. திலகர் ஈ. சுபாஷ் சந்திர போஸ்

33. இந்தியாவில் முதலாவதாக சுதந்திரப் போராட்டம் 1857ல் வெடித்த போது கவர்னர் ஜெனரலாக இருந்தவர் யார்?

அ. டல்ஹௌசி **ஆ. கானிங்**

இ. கர்சன் ஈ. லாரன்ஸ்

34. விஜய நகரப் பேரரசின் பழமையான சிதைந்த கட்டிடங்கள் காணப்படும் இடம்

அ. பிஜப்பூர் ஆ. கோல்கொண்டா

**இ. ஹம்பி** ஈ. பரோடா

35. இரண்டாவது அசோகர் என்று அழைக்கப்படுபவர் யார்?

அ. சமுத்திரகுப்தர் ஆ. சந்திரகுப்த மௌரியர்

**இ. கனிஷ்கர்** ஈ. ஹர்ஷவர்த்தனர்

36. காஞ்சியில் பிரபலமான கைலாசநாதர் கோவிலைக் கட்டியவர்

அ. மகேந்திரவர்மன் **ஆ. நரசிம்மவர்மன் II**

இ. நந்திவர்மன் ஈ. தண்டிவர்மன்

37. கபீரின் குரு என்று அழைக்கப்படுபவர் யார்?

அ. இராமானுஜர் **ஆ. இராமானந்தா**

இ.வல்லபாச்சார்யா ஈ. நாமதேவா

38. புத்த இலக்கியம் எழுதப்பட்டுள்ள மொழி

அ. ப்ராகிருதம் **ஆ. பாலி**

இ. சமஸ்கிருதம் ஈ. தமிழ்

39. ரிக் வேதத்தில் உள்ள இறைவனைத் துதிக்கும் பாடல்களின் எண்ணிக்கை

**அ. 1028** ஆ. 1000 இ. 2028 ஈ.1038

40. இந்தியாவின் மீது அலெக்ஸாண்டர் எந்த ஆண்டு படையெடுத்தார்?

அ. கி.மு. 298 ஆ. கி.மு. 303 இ. கி.மு. 302 **ஈ. கி.மு. 327**

41. இந்தியாவில் தங்க நாணயத்தை முதன்முதலாக வெளியிட்ட முதலாவது அரசர்கள் யார்?

அ. மௌரியர்கள் **ஆ. இந்தோ-கிரேக்கர்கள்**

இ. குப்தர்கள் ஈ. குஷானர்கள்

42. கீழ்க்கண்டவர்களுள் மிகப் பழமையான அரச வம்சத்தை சார்ந்தவர்கள் யார்?

**அ. மௌரியர்** ஆ. குப்தர் இ. குசான் ஈ. கன்வா

43. மெகஸ்தனிஸ் இந்தியாவிற்கு வருகை புரிந்த போது ஆட்சி செய்து கொண்டிருந்தவர்

அ. சந்திரகுப்தர் II **ஆ. சந்திரகுப்த மௌரியர்**

இ. அசோகர் ஈ. ஹர்ஷர்

44. கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் என்னும் நூல் எதைப் பற்றியது?

அ. பொருளாதார உறவுகள் **ஆ. ஆட்சிக்கலை பற்றிய கோட்பாடுகள்**

இ. அயல்நாட்டுக் கொள்கை ஈ. அரசரின் கடமைகள்

45. மகாபலிபுரத்தை உருவாக்கியவர்கள்

**அ. பல்லவர்கள்** ஆ. பாண்டியர்கள்

இ. சோழர்கள் ஈ. சாளுக்கியர்கள்

46. ஜாவா மற்றும் சுமத்திராவைக் கைப்பற்றி வெற்றி வாகை சூடிய இந்திய அரசர் யார்?

அ. ராஜராஜசோழர் **ஆ. ராஜேந்திர சோழர்**

இ. சமுத்திர குப்தர் ஈ. விக்ரமாதித்தியர்

47. இராமானுஜர் போதித்தது

அ. அஹிம்சை ஆ. ஞானம்

**இ. பக்தி** ஈ. வேதங்கள்

48. இந்தியாவில் யாருடைய ஆட்சிக் காலத்தில் இந்திய ஆட்சிப் பணி தொடங்கப்பட்டது?

அ. டல்ஹௌசி ஆ. கர்சன்

இ. பெண்டிங் **ஈ. கார்ன் வாலிஸ்**

49. 1942 ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு இயக்கம் தொடங்கிய போது யார் இந்தியாவில் வைஸ்ராயாக இருந்தார்?

**அ. லின்லித்கோ** ஆ. விலிங்டன்

இ. வேவெல் ஈ. இவர்களில் எவருமிலர்

50. 1946 ஆம் ஆண்டில் ஜவஹர்லால் நேரு அமைத்த இடைக்கால அரசாங்கத்தில் யார் உள்துறை அமைச்சராக நியமனம் செய்யப்பட்டார்?

அ. எம்.ஏ,ஜின்னா ஆ. பல்தேவ் சிங்

இ. லியாகத் அலிகான் **ஈ. சர்தார் பட்டேல்**

51. இந்திய தேசிய காங்கிரஸின் முதல் பெண் தலைவர் யார்?

அ. சரோஜினி நாயுடு ஆ. விஜயலக்ஷ்மி பண்டிட்

இ. இராஜ்குமாரி அம்ரித் கௌர் **ஈ. அன்னி பெசண்ட்**

52. எப்பொழுது முஸ்லீம் லீக் சுய ஆட்சியை ஓர் இலக்காக ஏற்றுக்கொண்டது?

அ. 1911 **ஆ. 1912** இ. 1919 ஈ. 1920

53. பிரிட்டிஷ் மக்களவையில் உறுப்பினராக இருந்த முதல் இந்தியர் யார்?

**அ. தாதாபாய் நௌரோஜி** ஆ. பத்ருதீன் தியாப்ஜி

இ. மகாத்மாகாந்தி ஈ. பாலகங்காதர திலகர்

54. இந்திய சேவர்கள் அமைப்பை உருவாக்கியவர் யார்?

**அ. கோபால கிருஷ்ண கோகலே** ஆ. தாதாபாய் நௌரோஜி

இ. மதன் மோகன் மாளவியா ஈ. பிபின் சந்திரபால்

55. இந்திய தேசிய காங்கிரஸ் கூட்டம் கூட்டப்பட்ட ஆண்டு

**அ. 1885** ஆ. 1886 இ. 1887 ஈ. 1888

56. 1857 ஆம் ஆண்டில் ஏற்பட்ட புரட்சியின் போது நேபாளுக்கு தப்பிச் சென்றவர் யார்?

அ. குன்வர்சிங் ஆ. தாந்தியா தோபி

இ. பகத்கான் **ஈ. நானாசாகிப்**

57. முதல் இந்திய காங்கிரஸ் கூட்டம் கூட்டப்பட்ட இடம்

**அ. பம்பாய்** ஆ. சென்னை இ. கல்கத்தா ஈ. டெல்லி

58. கீழ்க்கண்ட சட்டங்களில் எது சட்டமன்றத்திற்கு பிரதிநிதித் துவத்தை இந்தியர்களுக்கு முதன் முதலாக வழங்கியது?

**அ. இந்திய கவுன்சில் சட்டம், 1909** ஆ. இந்திய கவுன்சில் சட்டம், 1919

இ. இந்திய அரசாங்க சட்டம், 1935 ஈ. இவற்றுள் எதுவுமில்லை

59. ராஜ்ய கட்சியின் முதன்மை செயல் திட்டம் என்ன?

**அ. கவுன்சிலின் நுழைதல்** ஆ. அரசியலமைப்பு எதிர்ப்பு

இ. கிராமப்புற சீரமைப்புத் திட்டம் ஈ. இவற்றுள் எதுவுமில்லை

60. இந்திய சிற்றரசுகளை ஒருங்கிணைத்த பெருமைக்குரியவர்

**அ. சர்தார் பட்டேல்** ஆ. இராஜேந்திரபிரசாத்

இ. நேரு ஈ. மவுண்ட்பேட்டன் பிரபு

61. இந்தியாவில் சுயாட்சி இயக்கத்தை துவக்கியவர் யார்?

**அ. அன்னிபெசண்ட்** ஆ. லாலாலஜபதிராய்

இ. மோதிலால் நேரு ஈ. மதன்மோகன் மாளவியா

62. கீழ்க்கண்டவர்களில் யார் மூன்று வட்ட மேஜை மாநாடுகளிலும் கலந்து கொண்டவர்?

**அ. பி.ஆர். அம்பேத்கார்** ஆ. எம்.எம். மாளவியா

இ. வல்லபாய் பட்டேல் ஈ. இவர்களில் எவருமிலர்

63. கேபினட் மிஷன் திட்டத்தின் கீழ் அரசியல் நிர்ணய சபை ஏற்படுத்தப்பட்ட போது அதன் எண்ணிக்கை

**அ. 389 உறுப்பினர்கள்** ஆ. 411 உறுப்பினர்கள்

இ. 298 உறுப்பினர்கள் ஈ. 487 உறுப்பினர்கள்

64. துவக்க காலத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் அடைய விரும்பியது

**அ. சிறுசிறு சீர்திருத்தங்கள்** ஆ. டொமினியன்

இ. அந்தஸ்து ஈ. பூரண சுயராஜ்யம்

65. இந்திய அரசுப் பணியை தோற்றுவித்தவர்

**அ. காரன்வாலிஸ்** ஆ. டல்ஹௌசி

இ. வாரன் ஹேஸ்டிங்ஸ் ஈ. வெல்லெஸ்லி

66. ஹரப்பா நாகரிகத்தில் கூறப்பட்டுள்ள தானியக் களஞ்சியம் எங்கு காணப்படுகிறது?

**அ. மொகஞ்சதாரோ** ஆ. ஹரப்பா

இ. ரூபார் ஈ. காலிபங்கன்

67. கீழ்க்கண்டவர்களில் பழங்கால இந்தியாவின் சிறந்த சட்டம் வழங்குபவராக கருதப்பட்டவர்

அ. பாணபட்டர் **ஆ. மனு**

இ. கௌடில்யர் ஈ. பாணினி

68. இண்டிகாவை எழுதியர் யார்?

அ. கௌடில்யர் **ஆ. மெகஸ்தனிஸ்**

இ. கல்ஹணர் ஈ. பாணர்

69. மணிமேகலை காவியத்தை இயற்றியவர்

அ. நக்கீரர் ஆ. இளங்கோ அடிகள்

**இ. சாத்தனார்** ஈ. பூங்குன்றனார்

70. "உண்மையில் காங்கிரஸ், ஆயுதங்கள் இல்லாத உள்நாட்டு போராகும்: கூறியவர் யார்?

அ. மு.அ. ஜின்னா ஆ. கர்சன் பிரபு

**இ. டப்ரின் பிரபு** ஈ. சர் சையத் அகமது கான்

71. மிதவாதிகள் தீவிரவாதிகளிடமிருந்து பிரிந்து செல்ல தீர்மானித்தது எந்த ஆண்டில்?

அ.1906 **ஆ. 1907** இ. 1914 ஈ. 1919

72. காந்திஜியின் சம்பரான் இயக்கம் நடைபெற்றதற்கு காரணம்

அ. ஹரிஜனங்களின் உரிமை பாதுகாப்பிற்காக

ஆ. சட்டமறுப்பு இயக்கத்திற்கு

இ. இந்து சமூகத்தில் ஒற்றுமையை நிலைநாட்ட

**ஈ. இண்டிகோ தொழிலாளர்களின் பிரச்சனையை தீர்க்க**

73. 1888 ஆம் ஆண்டு அலகாபாத்தில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தொடரில் தலைமை தாங்கிய முதல் ஆங்கிலேயர்

அ. டபிள்யூ வெட்டர்பர்ன் ஆ. ஏ.ஓ.ஹியூம்

**இ. ஜார்ஜ் யூல்** ஈ. திருமதி அன்னிபெசண்ட்

74. 1916 ஆம் ஆண்டு லக்னோ ஒப்பந்தம் யார் யாருக்கிடையே ஏற்பட்டது?

அ. காங்கிரசுக்கும் பிரிட்டிஷாருக்கும்

ஆ. மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும்

**இ. காங்கிரசுக்கும் முஸ்லீம் லீக்குக்கும்**

ஈ. காந்திஜிக்கும் அம்பேத்காருக்கும்

75. காங்கிரசின் மிதவாதப் பிரிவும், தீவிரவாதப் பிரிவும் எந்த காங்கிரஸ் கூட்டத் தொடரில் மீண்டும் இணைந்தன?

**அ. 1916 லக்னோ** ஆ. 1920 கல்கத்தா

இ. 1921 பம்பாய் ஈ. 1922 கராச்சி

76. அசோகரது தர்மத்தில் காணப்படும் முக்கிய கொள்கை

அ. மன்னருக்கு விசுவாசமாக இருத்தல்

**ஆ. சமாதானம், அஹிம்சை**

இ. மூத்தோர்களுக்கு மரியாதை

ஈ. மத சகிப்புத் தன்மை

77. எதில் சமுத்திர குப்தரின் இசைப்புலமை நிரூபணமாகியுள்ளது?

அ. அலகாபாத் வெட்டு **ஆ. குறிப்பிட்ட சில நாணயங்கள்**

இ. இலக்கியங்கள் ஈ. வெளிநாட்டவரின் குறிப்புகள்

78. சீக்கிய மதத்தை தோற்றுவித்தவர்?

அ. குருகோவிந்த் **ஆ. குருநானக்**

இ. குரு அர்ஜுன் ஈ. இவர்களில் எவருமில்லை

79. அடையாள நாணய முறையை முதலில் இந்தியாவில் துவக்கியவர்

அ. அலாவுதின் கில்ஜி ஆ. கியாசுதின் துக்ளக்

**இ. முகமது பின் துக்ளக்** ஈ. பிரோஸ் ஷா துக்ளக்

80. இன்றைய ரூபாயின் தந்தை

அ. பாபர் ஆ. ஹீமாயூன் இ. ஜஹாங்கீர் **ஈ. ஷெர்ஷா**

81. வங்காளத்தில் இருந்த இரட்டையாட்சியை ஒழிந்தவர்

**அ. வாரன் ஹேஸ்டிங்ஸ்** ஆ. கர்ஸன்

இ. வில்லியம் பெண்டிங் ஈ. காரன் வாலிஸ்

82. சுல்தான் என்ற பட்டத்தை மேற்கொண்ட முதல் நபர்

அ. முகம்மது கஜினி ஆ. ஐபெக்

**இ. இல்துமிஷ்** ஈ. பால்பன்

83. அக்பரை எதிர்த்துப் போர் செய்த அரசி சாந்த் பீபி எந்த நாட்டை சேர்ந்தவர்?

அ. பிஜப்பூர் ஆ. கோல்கொண்டார்

**இ. அகமது நகர்** ஈ. மீரார்

84. இந்திய கவர்னர் ஜெனரலுக்கு அரசப் பிரதிநிதி என்ற பட்டம் முதன் முதலாக கொடுக்கப்பட்டது எப்பொழுது?

அ. கி.பி. 1862 **ஆ. கி.பி. 1858** இ. கி.பி. 1856 ஈ. கி.பி. 1848

85. 1921 ஆம் ஆண்டு மாப்ளா புரட்சி எங்கு ஏற்பட்டது?

அ. அஸ்ஸாம் **ஆ. கேரளா**

இ.பஞ்சாப் ஈ. மேற்கு வங்காளம்

86. 1857 ஆம் ஆண்டு புரட்சி வெடித்த போது மொகலாய அரசராக இருந்தவர்

அ. நாதிர்ஷா **ஆ. இரண்டாம் பகதூர் ஷா**

இ. முகமது அலி ஈ. தோஸ்த் அலி

87. "வைக்கம் வீரர்" என்று அழைக்கப்பட்டவர் யார்?

அ. இராபர்ட் கிளைவ் ஆ. வெல்லெஸ்லி

**இ. ஈ.வெ.ரா.** ஈ. இராஜாஜி

88. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது காந்திஜி எழுப்பிய முழக்கம் என்ன?

அ. டெல்லி சலோ ஆ. வந்தே மாதரம்

இ. ஜெய் ஹிந்த் **ஈ. செய் அல்லது செத்து மடி**

89. சுயராஜ்யக் கட்சியைத் தோற்றுவித்தவர்

அ. திலகர் **ஆ. சி.ஆர். தாஸ்**

இ. லாலா லஜபதிராய் ஈ. அன்னிபெசண்ட்

90. விவேகானந்தர் நிறுவிய அமைப்பு



winmeen.com

அ. ஆரிய சமாஜம் ஆ. பிரம்ம சமாஜம்

**இ. இராம கிருஷ்ண மிஷன்** ஈ. பிரார்த்தனா சமாஜ்

91. ஆகஸ்ட் அறிவிப்பை வெளியிட்டவர் யார்?

**அ. லின்லித்கௌ** ஆ. வேவல்

இ. லாரன்ஸ் ஈ. கர்ஸன்

92. 1857 ஆம் ஆண்டு புரட்சி தோன்றிய போது கவர்னர் ஜெனரலாக இருந்தவர்

அ. டல்ஹௌசி **ஆ. கானிங்**

இ. லாரன்ஸ் ஈ. கர்ஸன்

93. 'ஆலன் ஆக்டேவியன் ஹியூம்' என்பவர்

அ. நிர்வாகக் குழு உறுப்பினர் ஆ. இந்தியச் செயலர்

இ. இந்திய வைஸ்ராய் **ஈ. ஓய்வு பெற்ற அரசு அதிகாரி**

94. வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட நாள்

**அ. அக்டோபர் 11, 1799** ஆ. அக்டோபர் 12, 1799

இ. அக்டோபர் 13, 1799 ஈ. அக்டோபர் 14, 1799

95. அகில இந்திய தேசிய காங்கிரஸ் மூன்றாவது ஆண்டு மாநாடு நடத்தப்பட்ட இடம்

அ. நாக்பூர் ஆ. அகமதாபாத்

**இ. சென்னை** ஈ. பர்தோலி

96. டெல்லி எந்த ஆண்டில் ஆங்கில அரசின் தலைநகரானது?

அ. 1905 **ஆ. 1911** இ. 1935 ஈ. 1947

97. வேதாரண்யம் உப்பு சத்யாகிரகத்திற்கு தலைமை ஏற்றவர்

அ. வ.உ.சி. ஆ. திரு.வி.க. இ. ஈ.வெ.ரா **ஈ. இராஜாஜி**

98. மகாத்மா காந்தி கொல்லப்பட்ட நாள்

அ. ஜனவரி 28, 1948 ஆ. ஜனவரி 29, 1948

**இ. ஜனவரி 30, 1948** ஈ. ஜனவரி 31, 1948

99. இந்தியாவில் கம்பெனி தொடங்குவதற்கு ஆங்கிலேயர்களுக்கு அனுமதி அளித்தவர்

அ. அக்பர் **ஆ. ஜஹாங்கீர்**

இ. ஷாஜகான் ஈ. ஔரங்கசீப்

100. இந்தியாவோடு வர்த்தகத் தொடர்பு வைத்துக் கொண்ட முதலாவது நாடு

**அ. போர்ச்சுக்கல்** ஆ. ஹாலந்து

இ. பிரான்ஸ் ஈ. இங்கிலாந்து